பாடல்

இயல்
மூன்று

தொழில்/
வணிகம்

## கற்றல் நோக்கங்கள்

- உழைப்பின் மேன்மையை அறிந்துகொள்ளுதல்
- உழவுத்தொழிலே உலகத்தின் அச்சாணி எனப் புரிந்துகொள்ளுதல்
- இயற்கை வேளாண்மையைப் பற்றித் தெரிந்துகொள்ளுதல்
- செய்யும் தொழிலில் நேர்மையின் இன்றியமையாமையை உணர்ந்துகொள்ளுதல்
- அடுக்குத் தொடர்களையும் இரட்டைக் கிளவிகளையும் இடமறிந்து பயன்படுத்துதல்

# உழவுப் பொங்கல்

பொங்குக பொங்கல் பொங்குகவே
புதுவனம் நிறைந்தறம் தங்குகவே
எங்கணும் யாவரும் இன்பமுற
ஏர்த்தொழில் ஒன்றே தெம்புதரும்

உணவுப் பொருள்கள் இல்லாமல்
உயிரோ டிருப்பது செல்லாது
பணமும் அதுதரும் நலனெல்லாம்
பயிர்கள் விளைப்பதன் பலனேயாம்

உழவுத் தொழில்தான் உணவுதரும்
உடையும் அதனால் அணியவரும்
பழகும் மற்றுள தொழில்யாவும்
பயிர்த்தொழில் இன்றேல் விழலாகும்

தங்கமும் வெள்ளியும் இருந்தாலும்
தானியம் ஒன்றே விருந்தாகும்
இங்கிதன் உண்மையை உணர்ந்திடுவோம்
ஏர்த்தொழில் மிகுந்திடத் துணிந்திடுவோம்

உழவே செல்வம் உண்டுபண்ணும்
உழைப்பே இன்பம் கொண்டுவரும்
உழவைத் தொழுதிட வருநாளே
உற்றஇப் பொங்கல் திருநாளாம்

ஏழையும் செல்வரும் இங்கிதமாய்
இசைந்துளம் களித்திடும் பொங்கலிது
வாழிய பயிர்த்தொழில் வளம்பெருகி
வையகம் முழுதும் வாழியவே

– நாமக்கல் வெ. இராமலிங்கனார்





Tamil 5th-std_Term 2.indd 43 8/1/2019 1:12:43 PM

## சொல்பொருள்

| | | |
|---|---|---|
| எங்கணும் – எங்கும் | ஏர்த்தொழில் – உழவுத்தொழில் | விழலாகும் – வீணாகும் |
| களித்து – மகிழ்ந்து | இசைந்து – ஏற்றுக்கொண்டு | வையகம் – உலகம் |

## பாடல் பொருள்

உழவுத்தொழிலின் மேன்மையை இப்பாடல் விளக்குகின்றது. உழவின் சிறப்பால் பொங்குகின்ற பொங்கலை அனைவரும் கொண்டாடி மகிழவேண்டும் எனக் கூறுகின்றது. எங்கும் யாவரும் இன்பமாய் வாழ்வதற்கு ஏற்ற தொழில் ஏர்த்தொழிலே. உணவுப்பொருள்கள் இல்லையென்றால் நாம் வாழ்வது அரிது. பயிர்கள் விளைவிப்பதால் செல்வம் சேரும்; உணவு கிடைக்கும்; உடையும் தரும். மற்ற தொழில்களைக் கற்றுக்கொண்டாலும், பயிர்த்தொழில் இல்லையெனில் எல்லாம் வீணாகும். தங்கம், வெள்ளி போன்றவற்றை நாம் உண்ணமுடியாது. உணவுப்பயிர்களே நமக்கு உணவாக அமையும். இன்பத்தைத் தருவதும் உழவுத்தொழிலே ஆகும். பொருளில்லாதவரும் செல்வமுடையவரும் இணக்கமாய் வாழும் திருநாள் பொங்கல் நாளே. ஆகையால், ஏற்றம் தரும் ஏர்த்தொழிலின் பெருமையை உணர்ந்து அனைவரும் உழவுப் பொங்கலிட்டுப் பயிர்வளம் பெருக்குவோம்.

## நூல் குறிப்பு

உழவுப் பொங்கலின் சிறப்பை விளக்கும் இப்பாடலை இயற்றியவர், நாமக்கல் வெ. இராமலிங்கனார். அவருடைய கவிதைத் தொகுப்பிலிருந்து இப்பாடல் எடுத்தாளப் பெற்றுள்ளது. இந்திய விடுதலை குறித்தும், காந்தியடிகள் குறித்தும் பல பாடல்களைப் பாடியுள்ளார். காந்தியக் கவிஞர் என்றும் போற்றப்படுகிறார். இவருடைய 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்னும் பாடல் வரி மிகவும் புகழ்பெற்றதாகும். 'தமிழன் என்றோர் இனமுண்டு' என்றும் 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்றும் அவர் பாடிய பாடல் வரிகள் என்றும் நிலைத்திருப்பவை. இவர், தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக இருந்துள்ளார்.

## கற்பவை கற்றபின்

- உழவுத் தொழிலின் பெருமையை உணர்ந்து போற்றுக.
- பாடலை ஓசைநயத்துடன் பாடி மகிழ்க.
- பாடலிலுள்ள நயங்களைப் பாராட்டுக.
- உழவு நடக்கும் இடத்திற்குச் சென்று, செய்தி திரட்டுக.



Tamil 5th-std_Term 2.indd 44 8/1/2019 1:12:43 PM

மதிப்பீடு

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

LWUMH9

1. வையகம் என்பதன் பொருள்
   அ) ஊர்  ஆ) வயல்
   இ) உலகம்  ஈ) கிராமம்

2. நலனெல்லாம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) நலன்+ எல்லாம்  ஆ) நல + னெல்லாம்
   இ) நலன் + னெல்லாம்  ஈ) நலம் + எல்லாம்

3. நிறைந்தறம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______________
   அ) நிறைந்து + அறம்  ஆ) நிறைந்த + அறம்
   இ) நிறை + அறம்  ஈ) நிறை + தறம்

4. 'இன்பம்' – இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் _____________
   அ) மகிழ்ச்சி  ஆ) களிப்பு
   இ) கவலை  ஈ) துன்பம்

**ஆ. பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எழுதுக.**

_______________ _______________

_______________ _______________

**இ. பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

_______________ _______________

_______________ _______________

**ஈ. பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**

_______________ _______________

_______________ _______________

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அனைவரும் இன்பமுடன் வாழ்வதற்குத் தெம்பு தரும் தொழில் எது?
2. உழவுத்தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?
3. பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டுமெனக் கவிஞர் கூறுகிறார்?

**ஊ. சிந்தனை வினா**

'உழவர், சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்கமுடியும்' இதுபற்றி உங்கள் கருத்தென்ன?




Tamil 5th-std_Term 2.indd 45 8/1/2019 1:12:43 PM

இயல் மூன்று

உரைநடை

# விதைத் திருவிழா




காலை வழிபாட்டுக் கூட்டத்தில், தலைமையாசிரியர் கூறிய செய்தி, மாணவர்களின் உள்ளத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. காரணம், அருகிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் விதைத் திருவிழாவிற்கு அடுத்த வாரம் அவர்களை அழைத்துச் செல்லப் போகிறார்கள். அன்று முழுவதும் அங்கு நடைபெறும் நிகழ்வுகளைத் தம் நண்பர்களுடன் கண்டு மகிழலாம் அல்லவா!

விதைத் திருவிழா தொடர்பான துண்டு விளம்பரத் தாள்களைத் தலைமையாசிரியர் வகுப்பாசிரியர்களிடம் வழங்கினார். நம் பள்ளியிலிருந்து விதைத் திருவிழாவில் மாணவர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூறினார்.

தலைமையாசிரியரிடமிருந்து பெற்ற விளம்பரத் தாள்களை, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்கினர். துண்டு விளம்பரத்தாளிலுள்ள செய்திகளைப் படித்துப் பார்க்கச் செய்தனர்.

மாணவர்கள், விளம்பரத்தைப் படித்துப் புரிந்துகொண்டனர். விதைத் திருவிழாவில் தங்களுடைய பள்ளி சார்பாக என்னென்ன படைப்புகளை வழங்கலாம் எனக் குழுவில் கலந்துரையாடினர். பின்னர், தாங்கள் திரட்டிய படைப்புகளை ஆசிரியரிடம் காண்பித்து அனுமதி பெற்றனர். விதைத் திருவிழாவுக்குச் செல்லும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினர்.



Tamil 5th-std_Term 2.indd 46 8/1/2019 1:12:44 PM




மாணவர்கள் எதிர்பார்த்த நாளும் வந்தது. பள்ளியிலிருந்து அழைத்துச் செல்ல, வண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆசிரியர்களின் கனிவான பேச்சு, மாணவர்களுக்கு உற்சாகம் தந்தது.

**ஆசிரியர்** : மாணவர்களே, நாம் விதைத் திருவிழா நடைபெறும் அரங்கை நெருங்கி விட்டோம். நமது படைப்புகளைக் கண்காட்சியில் வைப்பதற்கு நான் உதவுகிறேன். வாருங்கள்.

**ரமணன்:** எனக்கு இந்த விதைத் திருவிழா பெருமகிழ்ச்சியைத் தருகிறது. மாலா, ரெஹானா விதைகளையெல்லாம் பாருங்களேன். இத்தனை வகைகளா? வியப்பாக இருக்கிறதே!

**மாலா:** ஆமாம், ரமணா! வகை வகையான விதைகள் என்பதைவிட, இந்த விதைகளை நாம் எப்படி சேகரிக்க வேண்டும், அதை எவ்வாறு பாதுகாக்க வேண்டும், அவற்றை எவ்வாறு முறைப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும் எழுதி வைத்துள்ளார்கள். விதைகள் எல்லாம் தரமானவையாக உள்ளன. இந்த விதைகள் மூலம் கிடைக்கும் சத்துக்கள், மருத்துவப் பயன்கள் பற்றியும் விளக்கமாகக் கூறுகிறார்கள், மேலும், விளக்கப் பலகைகளும் வைத்திருப்பது, மிகவும் பயனுள்ள வகையில் உள்ளது.

**மணிமொழி:** முகிலா, நெல் விதைகளின் பெயர்களைப் பார்த்தாயா? நாட்டு நெல் ரகங்களான மாப்பிள்ளை சம்பா முதலான பல்வேறு மரபு நெல் விதைகள், நாட்டுக்கம்பு, குதிரைவாலி, சோளம் போன்ற சிறு



Tamil 5th-std_Term 2.indd 47 8/1/2019 1:12:44 PM

நிலவளத்தைக் காப்போம்! நீர்வளத்தைப் பெருக்குவோம் ! பூமித்தாயைப் போற்றுவோம்.!

**இயற்கை வேளாண்மையின் இன்றியமையாமை**

350க்கும் மேற்பட்ட பாரம்பரிய விதைகள் சேகரிப்பு

- இயற்கை வேளாண் பொருள்கள்
- இயற்கை இடு பொருள்கள்
- இயற்கை பருத்தி ஆடைகள்
- இயற்கை கைவினைப் பொருள்கள்
- மண்ணோடு மட்கக்கூடிய பொருள்கள்
- மண்ணின் ஊட்டச்சத்து நீர் மேலாண்மை
- சூழலியல்
- தோட்டக்கலை
- பண்ணை அமைப்பு
- உணவுப் பாதுகாப்பு
- இயற்கை வேளாண்மை

அனைவரையும் சுண்டி இழுக்கும் 27 அரங்கங்கள்

தானியங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் கடலை, உளுந்து, முந்திரி, நாட்டுப்பருத்தி விதைகள், சிறுதானிய விதைகள் மட்டுமல்லாமல் அரிய மூலிகைச் செடிகளும் வைக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் பார்ப்பதை நமக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

பாரதி: மணிமொழி அதோ, அங்கே பார்! அந்த அரங்கில் இயற்கை இடுபொருள்கள் இயற்கை உணவுகள், வீட்டுத்தோட்டம் அமைப்பதற்கான குறிப்புகளும் தருகிறார்கள். வாங்க, வாங்க, என்ன சொல்கிறார்கள் எனக் கேட்போம்.

மணிமொழி: ரமணா, பாதிப்பு என்று இந்த அரங்கத்தில் எழுதியிருக்கே, என்னவாக இருக்கும்?

ரமணா: இரசாயன விதைகள், இரசாயனப் பூச்சி மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைத்தாம் பாதிப்பு என்று சொல்கிறார்கள். இதனால், மண்ணின் தன்மை கெடுகிறது. இதனைத் தடுக்கும்வகையில் இயற்கை முறையில் வேளாண்மை செய்ய வேண்டும் என்பதே அதன் பொருள்.

ரெஹானா: பாரதி, இங்கே பார்! சமையல் பாத்திரங்கள். இவை சாதாரண பாத்திரங்கள் அல்ல; பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்ட செம்பு, மரத்தாலான சமையல் பாத்திரங்கள், கருவிகள். இவற்றையும் நாம் பார்வையிடுவதற்காக வைத்துள்ளனர்.

ஆசிரியர்: மாணவச் செல்வங்களே, அனைத்துக் கூடங்களையும் பார்த்தீர்களா? இந்த விதைத் திருவிழா, உங்களுக்கு மிகுந்த பயனைத் தந்திருக்குமென நினைக்கிறேன்.



Tamil 5th-std_Term 2.indd 48 8/1/2019 1:12:44 PM



(மாணவர்கள் அனைவரும் "ஆமாம், ஐயா!" என்று கூறுகின்றனர்.)

**பாரதி:** ஐயா! அங்கே பாருங்கள். இயற்கை உணவுப்பொருள்கள் என்று எழுதப்பட்ட அந்த அரங்கத்தில் எல்லாரும் ஏதோ சுவைக்கிறார்கள். நாமும் அங்கே செல்லலாமா?

**மணிமொழி:** விழாவிற்கு வந்தவர்களுக்கு இயற்கை முறையில் தயாரித்த நவதானிய உணவுகளான இனிப்பு உருண்டை, பிட்டு, பொங்கல், கேழ்வரகுக் கூழ், கேழ்வரகு அடை, முளைகட்டிய பாசிப்பயறு, நவதானிய சுண்டல். கொண்டைக்கடலை, தட்டைப்பயறு, மொச்சை போன்ற தின்பொருள்களை வழங்குகிறார்கள்

ஆசிரியர்களுடன் மாணவர்களும் அந்த அரங்கில் நுழைந்தார்கள். இயற்கை உணவுகளைச் சுவைத்து மகிழ்ந்தார்கள்.

"**இந்த விதைத் திருவிழா** எங்களுக்குப் பயனுள்ள நிகழ்ச்சியாக இருந்தது. இந்த நாள் எங்களுக்கு இனிய நிகழ்வாகவும் அமைந்தது. இங்குப் பார்த்தவற்றை நாங்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்வோம்" என்று மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சி பொங்கக் கூறினார்கள். விதைத் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்த தலைமையாசிரியருக்கும் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி, மீண்டும் தங்களுடைய பள்ளிக்குத் திரும்பிச் சென்றார்கள்.



Tamil 5th-std_Term 2.indd 49 8/1/2019 1:12:45 PM

## கற்பவை கற்றபின்

- இயற்கை வேளாண்மையின் சிறப்புகளைப் பற்றி, வழிபாட்டுக்கூட்டத்தில் பேசுக.
- இயற்கை உணவுப்பொருள்களின் படங்களைத் திரட்டித் தொகுப்பேடு உருவாக்குக.
- 'இயற்கை உரம் பயன்படுத்துவோம், இனிமையாய் வாழ்வோம்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.
- உங்கள் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள இயற்கை விதைப் பண்ணைகளுக்குச் சென்று, செய்தி திரட்டுக.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் ஏதேனும் ஒரு விழாவுக்கு மாதிரி அழைப்பிதழ்/ துண்டு விளம்பரம் உருவாக்கி மகிழ்க.

## மதிப்பீடு

# படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?**

4WZ3I3

1. அனுமதி – இச்சொல் குறிக்கும் பொருள்-------------

அ) கட்டளை ஆ) இசைவு
இ) வழிவிடு ஈ) உரிமை

2. விளம்பரத்தாள்கள் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது-----------

அ) விளம்பர + தாள்கள் ஆ) விளம்புரத்து + தாள்கள்
இ) விளம்பரம் + தாள்கள் ஈ) விளம்பு + தாள்கள்

3. ஆலோசித்தல் – இச்சொல்லுக்குரிய பொருள்------------

அ) பேசுதல் ஆ) படித்தல்
இ) எழுதுதல் ஈ) சிந்தித்தல்

4. தோட்டம் + கலை– இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது----------

அ) தோட்டம்கலை ஆ) தோட்டக்கலை
இ) தோட்டங்கலை ஈ) தோட்டகலை

5. பழங்காலம் இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்-----------------------

அ) பழைய காலம் ஆ) பிற்காலம்
இ) புதிய காலம் ஈ) இடைக்காலம்

**ஆ. கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

அ) வழிபாடு + கூட்டம் – -----------------

ஆ) வீடு + தோட்டம் – -----------------



Tamil 5th-std_Term 2.indd 50 8/1/2019 1:12:45 PM

**இ. கீழ்க்காணும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

அ) அழைப்பிதழ் = ------- + --------

ஆ) விதைத்திருவிழா = ------- + --------

**ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக**

அ) விதைத்திருவிழாவில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளின் எண்ணிக்கை--------.

ஆ) விதைகள்---------ஆனவையாக இருத்தல் வேண்டும்.

இ) கொண்டைக்கடலை என்பது, -----------ஒன்று.

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாகத் தலைமையாசிரியர் கூறினார்?
2. ஆசிரியர் வழங்கிய துண்டு விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது?
3. 'பாதிப்பு' என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?
4. நவதானியங்களுள் ஐந்தின் பெயரை எழுதுக.

**ஊ. சிந்தனை வினா**

செயற்கை உரங்கள், மண்ணின் வளத்தைக் கெடுக்கும் எனில், அதற்கு மாற்றாக நாம் என்ன செய்யலாம்?



Tamil 5th-std_Term 2.indd 51 8/1/2019 1:12:45 PM

இயல் மூன்று


துணைப்பாடம்

# நேர்மை நிறைந்த தீர்ப்பு

பல ஆண்டுகளுக்குமுன் தென் பாண்டிய நாட்டை மங்கையர்க்கரசி என்பவர் ஆண்டு வந்தார். அவர், நீதியும் நேர்மையும் மிக்கவராக விளங்கினார். அவர் ஆட்சியில் மக்கள் குறைவின்றி வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள், கிராமத் தலைவர் ஒருவர் அரசியிடம் ஒரு வழக்கைக் கொண்டு வந்தார். அவருடன் நான்கு பேர்களும் அரண்மனைக்கு வந்தனர். அரசியை வணங்கிய கிராமத் தலைவர், தம் வழக்கை எடுத்துரைத்தார்.

"செல்வந்தர் ஒருவர், அரிய சாதனை புரிபவருக்கு நூறு பொற்காசுகள் கொண்ட பொற்கிழி ஒன்றைப் பரிசளிப்பதாக அறிவித்து, அதனைப் பஞ்சாயத்தாரிடம் கொடுத்தார். அந்தப் பொற்கிழியைப் பெறுவதற்கு இவர்கள் நால்வரும் போட்டி போட்டனர். நால்வருடைய அரிய சாதனையைக் கேட்ட எங்கள் ஊர்ப் பஞ்சாயத்தினர், யாருடைய சாதனை சிறந்தது என்று முடிவு கட்ட முடியாமல், பரிசுத் தொகையை நால்வருக்கும் சரிசமமாகப் பிரித்துக் கொடுக்கலாம் என முடிவெடுத்தனர்.






Tamil 5th-std_Term 2.indd 52 8/1/2019 1:12:45 PM

ஆனால், இந்நால்வரும் அதற்கு உடன்பட மறுத்தனர். அவரவர்க்கும் தங்கள் சாதனையே பெரியது என்று கூறி, பரிசுத் தொகை முழுமையாகத் தங்களுக்கே சேர வேண்டும் என்றனர். அதனால், தாங்களே இவர்கள் செய்த சாதனையைக் கேட்டு விசாரித்து, பொற்கிழியை யாருக்குக் கொடுப்பது என்று சரியான தீர்ப்பளிக்க வேண்டும்" என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார் அந்தப் பஞ்சாயத்து தலைவர்.

அரசியார் அந்நால்வரையும் பார்த்தார்., "ஒவ்வொருவராக உங்கள் சாதனையைச் சொல்லுங்கள்," என்று ஆணையிட்டார்.

முதலில், முருகேசன் என்பவர் தம் சாதனையைச் சொல்லத் தொடங்கினார்; "நான் ஒரு வியாபாரி. மளிகைக் கடை வைத்துள்ளேன். வியாபாரத்தில் முழுக்கவனத்தோடு ஈடுபட்டிருந்தபோது, சிறுமி ஒருத்தி ஒருநாள் என் கடைக்கு வந்தாள். கடையில் சில பொருள்களை வாங்கினாள். நான் வேலையில் மும்முரமாக இருப்பதைக் கவனித்துவிட்டுப் பணம் கொடுக்காமல் நழுவப் பார்த்தாள். அப்போது தெருவில் வந்த மாடு, அவளை ஆவேசமாக முட்டுவதற்குப் போனது. நான் பாய்ந்துசென்று அவளைக் காப்பாற்றினேன். இத்தனைக்கும் அவள் தந்தைக்கும் எனக்கும் நிலத்தகராறு உண்டு. அடிதடிவரைகூடப் போய்விட்டோம். அப்படியிருந்தும் அவளை நான் காப்பாற்றினேன். அதைக் கண்ட ஊர்மக்கள் எல்லாரும் என்னைப் பாராட்டினார்கள். ஓர் உயிரைக் காப்பாற்றியது அதுவும் பகைவனின் மகளைக் காப்பாற்றியது பெரிய சாதனை இல்லையா? அதனால்தான் பொற்கிழியை எனக்கே கொடுக்க வேண்டும் என்கிறேன்."என்று சொன்னார் முருகேசன்.

இரண்டாவதாக, கண்ணன் என்பவர் தம் சாதனையைச் சொல்லலானார்."நான் ஒரு கவிஞன். பல பாடல்களும் கவிதைகளும் இயற்றியுள்ளேன். ஒரே இரவில், உலகம் வியக்கும்படியாக நூறு செய்யுள்களைக் கொண்ட 'ஆனந்த வாழ்வு' என்ற காவியத்தைப் படைத்துள்ளேன். மக்கள் எல்லாரும் அதை விரும்பிப் படிக்கிறார்கள். ஒரே இரவில் இப்படி ஒரு காவியத்தைப் படைத்தது ஓர் இலக்கிய சாதனை அல்லவா? எனவே பொற்கிழி பெற முற்றிலும் தகுதி உள்ளவன் நான் ஒருவனே!" இவ்வாறு தன்னிலை விளக்கம் அளித்தார் கவிஞர்.

அடுத்ததாக மூன்றாவது ஆள், கல்தச்சர் கந்தசாமி. அவர் தம் சாதனையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். "கரடுமுரடான பாறையையும் வெட்டிக்கொண்டு வந்து, அழகிய சிலையாகவும் எழிலான தூண்களாகவும் செய்யும் கல் தச்சன் நான். சிற்றுளியைக் கையில் எடுத்தால் போதும், அது பேசும்; பாடும்; நடனமாடும். பாறையைக் குடைந்து குடைவரைக் கோவில்களும் மண்டபங்களும் செய்துள்ளேன். நான் செதுக்கிய குகைக் கோவிலைக் கண்டு வியந்து பாராட்டாதவர்களே இல்லை. அது என் அரிய சாதனை. அதில் என்னை வெல்ல எவருமில்லை. எனவே, பொற்கிழியை எனக்குக் கொடுப்பதே பொருத்தம்!" என்றார் கல்தச்சர் கந்தசாமி.

நான்காவதாக முதியவர் ஒருவர் வந்தார். அவர், தமது சாதனை என்ன என்று சொல்லலானார். "நான் சாதாரண ஓர் ஏழை விவசாயி. என் மூதாதையர் வழியில் எனக்குக் கிடைத்த ஒரு காணி நிலத்தை நன்கு உழுது பயிரிட்டுப் பிழைத்து




Tamil 5th-std_Term 2.indd 53 8/1/2019 1:12:46 PM

வருகிறேன். என் மனைவி காலமாகிவிட்டாள். என் மகளும் நானும்தான் வயலில் உழைத்து வாழ்க்கை நடத்துகிறோம். இருவரும் பாடுபட்டு வேலை செய்ததால், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு மூன்று மடங்கு விளைச்சல் கண்டுள்ளது. என் குடும்பத்திற்குத் தேவையான நெல் போக, மீதியைப் பத்துக் குடும்பத்திற்கு விற்றேன். ஒரு காணி நிலத்தைக் கொண்டு பத்துக் குடும்பத்தைக் காப்பாற்றியது என் சாதனைதானே?" என்று கேட்டார் முதியவர்.

மங்கையர்க்கரசி சற்று யோசித்தார். பிறகு தம் தீர்ப்பைக் கூறலானார்.

"தன் உயிரையோ, பகையையோ பொருட்படுத்தாமல், பாய்ந்துசென்று பகையாளி மகளைக் காப்பாற்றியது அரிய சாதனைதான். பகைவருக்கும் நட்பு காட்டுவது நமது பண்பாடு. "இராவணனைப் பார்த்து, இன்றுபோய் நாளை வா!" என்றதும் "சுற்றி நில்லாதே போ பகையே, துள்ளி வருகுது வேல்" என்ற பாடல் வரிகளும் பண்பாட்டையே வெளிப்படுத்துகின்றன. எனவே, பகைவரின் மகளை நீர் காப்பாற்றியது, நமது பண்பாட்டுச் செயலே தவிர, புதிய சாதனை ஏதுமில்லை".

"அடுத்து, கவிஞர் ஒரே இரவில் நூறு கவிதைகளைப் புனைந்து காவியம் படைத்துள்ளதாகச் சொன்னார். சோழ நாட்டில் இருந்த பெண் கவி ஒருவர், ஒரே இரவில் ஆயிரம் கவிதை புனைந்து காவியம் படைத்தது பழைய செய்தி. எனவே, ஒரே இரவில் நீர் நூறு கவிதை புனைந்து காவியம் படைத்ததை அரிய சாதனையாக ஏற்க முடியாது".



"அடுத்ததாகக் கல் தச்சர், பாறையைக் குடைந்து பார்ப்போர் வியக்கும்வகையில் குடைவரைக் கோவில் உருவாக்கியதை ஒரு சாதனையாகச் சொன்னால், மாமல்லபுரம் கோவில்களும், திருச்சி பல்லவர்காலக் கோவில்களும் அழகிய குடைவரைக் கோவில்களே! எனவே, இவர் செய்தது புதுமையான சாதனை அன்று".

நாலாவதாக, முதிய விவசாயி, தமது ஒருகாணி நிலத்தில் மும்மடங்கு நெல் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார். உண்மையில் இது பெரிய சாதனைதான். எந்த அளவிற்குப் பாடுபட்டு உழைத்திருந்தால், இந்த அளவு பலன் காண முடியும்! அவரது உழைப்பால், மேலும் பத்துக் குடும்பங்களுக்குப் பயன் கிடைத்துள்ளது. விவசாயிகள் ஒவ்வொருவரும் இப்படிச் சாதனை செய்தால் நாட்டில் பஞ்சம், பசி இருக்காது; நோய்நொடி இருக்காது; வறுமையும் இருக்காது. எனவே, பொற்கிழி பெறத் தகுதியானவர் இவர்தாம். இவருக்கே பொற்கிழியை வழங்க ஆணையிடுகிறேன்" என்று நேர்மை நிறைந்த தீர்ப்பை வழங்கினார் மங்கையர்க்கரசி. அவரது தீர்ப்பைக் கேட்டு, மக்கள் எல்லாரும் அவரை வாழ்த்தினர்.

## கற்பவை கற்றபின்

- நேர்மையால் உயர்ந்தவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்துகொள்க.
- நேர்மை நிறைந்த தீர்ப்பு கதையை நாடகமாக நடித்துக்காட்டுக.

## மதிப்பீடு

F4RE4B

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அரசியிடம் கிராமத் தலைவர் கொண்டுவந்த வழக்கு யாது?

2. முருகேசன் தாம் என்ன சாதனை புரிந்துள்ளதாகக் கூறினார்?

3. விவசாயியின் சாதனைதான் உயர்ந்தது என்று அரசி கூறக் காரணம் என்ன?

**சிந்தனை வினா**

நண்பர்கள் உன்னை வீட்டில் வந்து சந்திக்கின்றனர். அவர்கள் சென்றபிறகு, பணப்பை ஒன்று நாற்காலியில் இருப்பதைக் காண்கிறாய். இந்நிலையில் நீ செய்யப்போவது என்ன?

அ) பணப்பையை உரியவரிடம் கொடுப்பேன்

ஆ) உரியவரே தேடிக்கொண்டு வரட்டும் எனக் காத்திருப்பேன்.

இ) நான் பார்த்ததால், எனக்குத்தான் உரியது என வைத்துக்கொள்வேன்.



Tamil 5th-std_Term 2.indd 55 8/1/2019 1:12:46 PM

## கற்கண்டு

### அடுக்குத் தொடர், இரட்டைக்கிளவி

தேனிசை: அடடே, செல்வியா? வா! வா! வா! எப்படி இருக்கிறாய்?

செல்வி: (**கலகலவென** நகைத்தவாறே) ஓ! நன்றாக இருக்கிறேன். அத்தை எங்கே?

தேனிசை: அவர்கள் வேலைக்குச் சென்றிருக்கிறார்கள்.

(அப்போது **தடதட வென** அங்கே ஓடி வருகிறான் தேனிசையின் தம்பி மதியழகன்)

செல்வி: மதி, ஏன் இப்படி **படபடவென** மூச்சு இரைக்க ஓடி வருகிறாய்? என்ன ஆயிற்று?

மதியழகன்: அக்கா, அங்கே **பாம்பு, பாம்பு**... ...

தேனிசை: மதி, விளையாடாதே, அன்றும் இப்படித்தான் **தீ, தீ, தீ** என்று சொல்லிக்கொண்டே ஓடி வந்தாய். ஆனால், அப்படி எதுவும் இல்லை. **போ, போ, போ** இப்படியெல்லாம் பொய் சொல்லாதே.

மதியழகன்: அக்கா, உண்மையாகத்தான் சொல்கிறேன். நீங்களே வந்து பாருங்கள்.

செல்வி: தேனிசை, தம்பி **திரும்பத் திரும்பச்** சொல்வதைப் பார்த்தால் பொய் சொல்வதுபோல் தெரியவில்லையே, **வா, வா**, போய்ப் பார்க்கலாம்.

(அவர்கள் வெளியில் வந்து பார்த்தபோது, அருகிலிருந்த மரத்தின்மீது பாம்பொன்று **சரசரவென** ஊர்ந்து கொண்டிருந்தது. அதன் உடல் **பளபளவென** வெயிலில் மின்னியது).

மேற்கண்ட உரையாடலில் சில சொற்கள் தடித்த எழுத்துகளில் உள்ளன. அவை என்னவென்று அறிந்துகொள்வோமா?

சில சொற்கள் எப்போதும் இரண்டாகவே வரும். அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தால் பொருள் தரா. உரையாடலில் **கலகல, தடதட, படபட, பளபள** என வரும் சொற்களில் **கலகல** என்பதைக் **கல** எனத் தனியாகப் பிரித்தால் பொருள் இல்லை. அதனால், இம்மாதிரியான சொற்கள் எப்போதும் இரட்டைச் சொல்லாகவே வரும். ஆகவே, இவற்றை இரட்டைக்கிளவி என்பர்.

இரட்டை என்பது, இரண்டு. கிளவி என்பது, சொல். இரட்டைக் கிளவி ஒலிக்குறிப்பு, விரைவுக்குறிப்பு, வியப்புக்குறிப்பு, சினக்குறிப்பு போன்ற பலவகைக் குறிப்புகளை உணர்த்தும்.



Tamil 5th-std_Term 2.indd 56 8/1/2019 1:12:46 PM

சில சொற்கள் இரண்டாகவோ மூன்றாகவோ ஏன் நான்காகவோ கூட அடுக்கி வரலாம். ஆனால், அவற்றைத் தனித்தனியாகப் பிரித்தாலும் பொருள் தரும். உரையாடலில் **வா வா வா, பாம்பு பாம்பு, தீ தீ தீ, போ போ போ, திரும்பத் திரும்ப** போன்ற சொற்கள் வந்துள்ளன. இவற்றைத் தனித்தனியாகப் பிரித்தாலும் பொருள் தரும். இவற்றை அடுக்குத்தொடர் என்பர்.

வா, வா, வா என மூன்றுமுறை அடுக்கிவரும் சொல்லை வா எனத் தனியே பிரித்தாலும் அஃது ஓரெழுத்து ஒருமொழியாய் வருகையைக் குறிக்கிறது. அடுக்குத்தொடர் அசைநிலை, விரைவு, வெகுளி, அச்சம், உவகை, அவலம், இசைநிறை முதலிய பொருள்களைக் குறித்து வரும்.

- ☞ எப்போதும் இரட்டைச் சொல்லாகவே வருவது, இரட்டைக்கிளவி.
- ☞ ஒரு சொல்லே இரண்டு அல்லது அதற்குமேல் அடுக்கி வருவது, அடுக்குத்தொடர்.

| இரட்டைக்கிளவி | அடுக்குத்தொடர் |
|---|---|
| இரட்டைச் சொல்லாக வரும் | ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வரும். |
| தனித்தனியே பிரித்தால் பொருள் தராது | தனித்தனியே பிரித்தாலும் பொருள் தரும். |
| இரண்டு முறைக்குமேல் அடுக்கி வராது | இரண்டு அல்லது அதற்குமேல் அடுக்கி வரும். |

## கற்பவை கற்றபின்

- இரட்டைக்கிளவிகளைப் பயன்படுத்தித் தொடர்கள் எழுதுக.
- உரைப்பகுதிகளில் காணப்படும் அடுக்குத்தொடர்களைத் தொகுத்து எழுதுக.
- அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி வருமாறு கற்பனைக் கதையொன்றை எழுதுக.

மதிப்பீடு

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. அடிபட்ட கால் __________ என வலித்தது.

அ) கடகட ஆ) விண்விண்

இ) படபட ஈ) கணகண

2. காலைப்பொழுது __________ வென புலர்ந்தது.

அ) பலபல ஆ) தடதட

இ) புலபுல ஈ) மளமள

3. குயில் ___________ எனக் கூவியது.

அ) கீச்கீச் ஆ) கூகூ

இ) கொக்கொக் ஈ) பக்பக்

4. மணமக்களை __________ என வாழ்த்தினர்.

அ) வருக வருக ஆ) வாழ்க வாழ்க

இ) வீழ்க வீழ்க ஈ) வளர்க வளர்க

### ஆ. பொருத்துக.

1. கலகலவென – விரைவுக்குறிப்பு

2. நறநறவென – ஒலிக்குறிப்பு

3. தடதடவென – சினக்குறிப்பு



Tamil 5th-std_Term 2.indd 58 8/1/2019 1:12:47 PM

**இ. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருந்துமாறு இரட்டைக்கிளவி/ அடுக்குத்தொடர்களைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**



அடர்ந்த காடு. ஒன்றையொன்று துரத்தி விளையாடிக்கொண்டிருந்த குரங்குகள், திடீரெனக் குரலெழுப்பியவாறு, ஒவ்வொரு மரமாக ஏறியும்இறங்கியும் கிளைக்குக் கிளை ---------------ச் சென்றன. அவை எழுப்பிய ஓசையினால், பறவைகள் தத்தம் சிறகுகளைப் --------வென அடித்துக்கொண்டு பறந்தன. அருகிலிருந்த சிற்றாற்றில், நீர் --------வென ஓடிக்கொண்டிருந்தது. நீர்நிலை தேடிக் ----------மாக வந்த யானைகள், அந்த ஆற்றைக்கண்டு, களிநடனமிட்டன. அருகில் வளர்ந்திருந்த தென்னை மரமொன்றிலிருந்த தேங்காய்கள், ---------எனக் கீழே விழுந்தன. அந்த ஓசையைக் கேட்டு, மிரண்ட யானைக்கன்று --------வென ஓட, அருகிலிருந்த மான்கள் அங்குமிங்கும் -----------ஓடின. சூல்கொண்ட மேகங்கள், ----------வெனத் திரள, --------வென மின்னல் மின்னியது. சற்றுநேரத்தில், --------வென மழை பெய்ய, குரங்குகள் மரத்தின் மீது -------- வென ஏறின.

தபதப, துள்ளித் துள்ளி, கூட்டம் கூட்டம், படபட, சலசல,
சடசட, கருகரு, பளபள, மடமட, தாவித் தாவி, பொத்து பொத்து



Tamil 5th-std_Term 2.indd 59 8/1/2019 1:12:47 PM

## மொழியை ஆள்வோம்

### அ. கேட்டல்

- எளிய, இனிய ஓசைநயமிக்க பாடல்களைக் கேட்டு மகிழ்க.
- உழவு வேலை நடைபெறும் இடங்களில் பாடப்படும் பாடல்களைக் கேட்டு மகிழ்க.

### ஆ. பேசுதல்

- 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்னும் தலைப்பில் 5 மணித்துளி பேசுக.
- நேர்மையாக வாழ்ந்தவர்களுள் யாரேனும் ஒருவரின் பண்புகளைப் பாராட்டிப் பேசுக.

### இ. படித்தல்

- செய்தித்தாளில் இடம்பெறும் வேளாண்மை பற்றிய செய்திகளை வகுப்பில் படித்துக்காட்டுக.
- உங்கள் பள்ளியில் நடைபெறும் விழாவுக்குத் துண்டு விளம்பரத்தாள் தயாரித்து, அனைவருக்கும் படித்துக்காட்டுக.

### ஈ. எழுதுதல்

#### 1. சொல்லக் கேட்டு எழுதுக.

1. விதைத் திருவிழாவிற்குச் செல்வோம்.
2. இயற்கை வேளாண்மை அன்புடன் வரவேற்கிறது.
3. நீர்வளத்தைப் பெருக்குவோம்.
4. மண்ணின் ஊட்டச்சத்து நீர் மேலாண்மை
5. ஆர்வலர்களைச் சுண்டியிழுக்கும் அரங்குகள்

#### 2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. திருவிழா ____________________________________________
2. இரசாயன விதை ____________________________________________
3. விளம்பரப் பலகை ____________________________________________
4. வீட்டுத் தோட்டம் ____________________________________________
5. பழங்காலம் ____________________________________________

#### 3. ஒருபொருள் தரும் பல சொற்களை எழுதுக.

1. வயல் – செய், கழனி
2. உழவு – ______, ______
3. மகிழ்ச்சி – ______, ______
4. வீடு – ______, ______
5. பேசு – ______, ______



Tamil 5th-std_Term 2.indd 60 8/1/2019 1:12:47 PM

## 4. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.

நீர்வளமும் நிலவளமும் உடைய தமிழ்நாட்டில் பண்டைக் காலத்திலிருந்தே பயிர்த்தொழில் சிறந்ததாகக் கருதப்பட்டது. முற்காலத் தமிழர் தொழுதுண்டு வாழ விரும்பினார் அல்லர்; உழுதுண்டு வாழவே விரும்பினார்கள். 'சீரைத் தேடின் ஏரைத் தேடு' என்றார் ஒரு புலவர். ஏர்த்தொழில் இனிது நடைபெறுவதற்கு மழை இன்றியமையாதது. தாய் முகம் காணாப் பிள்ளையும் மழை முகம் காணாப் பயிரும் செழிப்படைவதில்லை. ஆகவே, தமிழ்நாட்டார் வானத்திலே தவழும் மேகத்தையே நோக்கி வாழ்ந்தார்கள். உயர்ந்து ஓங்கிய மலைகளில் மேகம் தவழக் கண்டால் தமிழர் உள்ளம் தழைக்கும்; கார்மேகத்தின் இடையே மின்னல் வீசக் கண்டால் அவர் உள்ளம் துள்ளி மகிழும்.

1. பண்டைக்காலத்திலேயே சிறந்ததாகக் கருதப்பட்ட தொழில் எது?
2. முற்காலத் தமிழர் எப்படி வாழ விரும்பினர்?
3. ஏர்த்தொழில் இனிது நடைபெற எது தேவை?
4. தமிழர் உள்ளம் துள்ளி மகிழக் காரணம் என்ன?
5. மழையுடன் தொடர்புடைய சொற்களை எழுதுக.

## 5. கீழ்க்காணும் பாடலைப் படித்து மகிழ்க.

**நீர் மேலாண்மை ஆத்திசூடி**

அகலத் தூறிடு
ஆழ்துளை நீக்கு
இருகரை சமன்செய்
ஈராறு இணை
உப்புநீர் வடி
ஊற்றுநீர் பெருக்கு
எரிபொருள் சேமி
ஏரியைக் காத்தல் செய்
ஐம்பொறி அழுக்கறு
ஒன்றாக்கு நீர்நிலை
ஓங்கிடும் உலகெலாம்
ஔடதம் நீர்



Tamil 5th-std_Term 2.indd 61 8/1/2019 1:12:47 PM

# மொழியோடு விளையாடு

1. உழவுத் தொழிலுடன் தொடர்புடைய பழமொழிகளின் சொற்கள் இடம் மாறியுள்ளன. அவற்றை முறைப்படுத்தி எழுதுக.

1. பட்டம், தேடி, ஆடிப், விதை, – ஆடிப்பட்டம் தேடி விதை
2. தேடு, ஏரைத், தேடின், சீரைத் – ------------------
3. உழுவதை, அகல, விட, உழு, ஆழ – ------------------


2. கீழ்க்காணும் பாடலிலுள்ள தொகைச்சொற்களை விரித்து எழுதுக.

இருவினை அறிந்து கொள்வோமே!
முத்தமிழ் கற்றுத் தேர்வோமே!
நாற்றிசை தேடிச் செல்வோமே!
ஐந்திணை சுற்றி வருவோமே!
அறுசுவை உண்டு மகிழ்வோமே!

இருவினை – நல்வினை, தீவினை
முத்தமிழ் – -----, -----, -----,
நாற்றிசை – -----, -----, -----, -----,
ஐந்திணை – -----, -----, -----, -----, -----
அறுசுவை – -----, -----, -----, -----, -----, -----,

3. குறிப்புகளைப் படித்துத் 'தை' என முடியும் சொற்களை எழுதுக.

1. மெதுவாக ஊர்ந்து செல்லும் ஓர் உயிரி
2. பொதி சுமக்கும் விலங்கு
3. பகலில் கண் தெரியாப் பறவை
4. பாரதியாரின் சிறப்பு




4. கீழ்க்காணும் தொடரைப் பல தொடர்களாக மாற்றுக.

1. மணமலர் படம் வரைந்தாள்

அ) மணமலர் படம் வரைந்தாளா?
ஆ) மணமலரா படம் வரைந்தாள்?
இ) மணமலர் படம் வரை
ஈ) மணமலர் படம் வரைவாயா?



Tamil 5th-std_Term 2.indd 62 8/1/2019 1:12:48 PM

2. கதிரவன் வீட்டுக்குச் சென்றான்

அ) ---------------------

ஆ) --------------------

இ) ---------------------

ஈ) ---------------------

உ) --------------------

**5. புதிய சொற்களை உருவாக்குக.**

1. விளையாட்டுத் திடல் – விளை, விளையாட்டு, திடல், விடல், விடு., விடுதி, வில்

2. பல்கலைக்கழகம் – ---------------------------------------

3. கவிதைத்திரட்டு – ---------------------------------------

**6. பாடலைத் தொடர்ந்து பாடி மகிழ்க.**

விடுகதையாம் விடுகதை
விடை காணும் விடுகதை
உயரமாக இருப்பானாம்
ஒரே இடத்தில் நிற்பானாம்
இளநீர்,தேங்காய் தருவானாம்
ஓலைக்கீற்றும் தருவானாம்
அவன் பெயர் என்ன?
தென்னை மரம் அவன்தானே
விடுகதையாம் விடுகதை
-----------------
-----------------
-----------------
-----------------



Tamil 5th-std_Term 2.indd 63 8/1/2019 1:12:48 PM

## நிற்க அதற்குத் தக

- உழவின் மேன்மையை அனைவருக்கும் உணர்த்துவேன்.
- இயற்கை உரங்களின் பயன்களைச் சொல்வேன்.
- மழைவளம் பெருக மரம் வளர்க்க உதவுவேன்.

## செயல் திட்டம்



- உழவு தொடர்பான படம் ஒன்றை வரைந்து வண்ணம் தீட்டுக.
- உழவு தொடர்பான பாடல்களுள் ஐந்து எழுதி வருக.



Tamil 5th-std_Term 2.indd 64 8/1/2019 1:12:48 PM

# அகரமுதலி

| | | | |
|---|---|---|---|
| 1 | அஞ்சா நெஞ்சம் | – | மனஉறுதி |
| 2 | அதிகரித்தல் | – | மிகுதியாதல் |
| 3 | அனுமதி | – | இசைவு |
| 4 | ஆயுதங்கள் | – | கருவிகள் |
| 5 | ஆவல் | – | விருப்பம் |
| 6 | ஆவேசமாக | – | சினங்கொண்டு |
| 7 | ஆனந்தம் | – | மகிழ்ச்சி |
| 8 | உகந்த நிலம் | – | ஏற்ற நிலம் |
| 9 | எழிலான | – | அழகான |
| 10 | களித்தாள் | – | மகிழ்ந்தாள் |
| 11 | கனிவான பேச்சு | – | இனிமையான பேச்சு |
| 12 | கெட்டில் | – | நீர் கொதிக்க வைக்கும் கலம் |
| 13 | கோழை | – | வீரமில்லாதவன் |
| 14 | சாதனை | – | வெற்றி |
| 15 | சாதாரணம் | – | எளிய |
| 16 | செல்வந்தர் | – | பணக்காரர் |
| 17 | சேகரித்தல் | – | திரட்டுதல் |
| 18 | சோர்ந்து | – | களைத்து |
| 19 | தாழ்மை | – | தாழ்வு |
| 20 | தாளாண்மை | – | முயற்சி |
| 21 | திடமான | – | உறுதியான |
| 22 | பாதிப்பு | – | விளைவு |
| 23 | பிரதேசம் | – | நாடு |
| 24 | பொலிவு | – | அழகு |
| 25 | மிளிர்தல் | – | ஒளிர்தல் |
| 26 | மைதானம் | – | திடல் |
| 27 | வாளாண்மை | – | வாளைக் கையாளும் திறமை |
| 28 | வியாபாரி | – | வணிகர் |
| 29 | விவசாயி | – | உழவர் |
| 30 | வேளாண்மை | – | உழவு |



Tamil 5th-std_Term 2.indd 65 8/1/2019 1:12:48 PM

# கற்றல் விளைவுகள்

| கேட்டல் | பேசுதல் | படித்தல் | எழுதுதல் |
|---|---|---|---|
| • விழிப்புணர்வுப் பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.<br>• வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு, விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்துகொள்வர்.<br>• எளிய செயல் திட்டங்களைக் கேட்டுப் புரிந்துகொள்வர். | • பல்வேறு பாடல்களைப் பொருளுணர்ந்து பாடுவர்.<br>• அறிந்த எளிய தலைப்புகளில் இயல்பாகவும் தங்கு தடையின்றியும் பேசுவர்.<br>• கேட்ட/படித்த பல்வேறு இலக்கியங்கள் பற்றிப் பேசுதல், சொல்லாடல், பகுப்பாய்தல் செய்வர்.<br>• பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர்.<br>• தம்மைச் சுற்றி நிகழும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிவர்.<br>• கேட்கும்/படிக்கும் கதை, கவிதை, செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர். | • செய்தி, நிகழ்ச்சி அறிவிப்பு, நிகழ்ச்சிநிரல், துண்டறிக்கை, அழைப்பிதழ்கள், வெளியீடுகள் ஆகியவற்றைப் படித்துப் பொருளுணர்வர்.<br>• படக்கதைகளையும் கதைப்பாடல்களையும் படித்துப் புரிந்துகொள்வர்.<br>• சொற்களின் பொருண்மைகளை அகரமுதலிகளில் கண்டறிவர்.<br>• எளிய படவிளக்கங்கள், வரைபடங்கள் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்வர்.<br>• பல்வேறு துறை சார்ந்த சொற்களைப் புரிந்துகொண்டு பொருத்தமான இடங்களில் பயன்படுத்துவர். | • உரிய வடிவத்தில் முறையான இடைவெளிவிட்டு எழுதுவர்.<br>• எளிய உரைப்பகுதி, கதை, இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து கருத்து தெரிவிப்பர். அவற்றிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர்.<br>• சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளை உற்றுநோக்கி அவைசார்ந்த தமது கருத்துகளை எழுத்தில் பதிவு செய்வர்.<br>• பல்வேறு சூழல்களுக்கு ஏற்ப எழுதும்போது, மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு, பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்திக் கவனமாக எழுதுவர்.<br>• கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கவிதைகள், கடிதங்கள் எழுதுவர்.<br>• செய்யுள்/ பாடல்களை அடிபிறழாமல் எழுதுவர்.<br>• விண்ணப்பக் கடிதம் எழுதுவர். |



Tamil 5th-std_Term 2.indd 66 8/1/2019 1:12:48 PM

| நடைமுறை இலக்கணமறிதல் | கற்கக் கற்றல் | சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும் |
|---|---|---|
| • மூவிடப்பெயர்கள் பயன்படும் இடங்களை அறிந்து, தம் பேச்சிலும் எழுத்திலும் முறையாகப் பயன்படுத்துவர்.<br>• தொடர்களை இணைத்து எழுத இணைப்புச்சொற்களைப் பயன்படுத்துவர்.<br>• அடுக்குத்தொடர் சொற்கள் பயின்றுவரும் இடங்களை அறிந்துகொள்வர். தாம் எழுதும் கட்டுரை, உரையாடல், உரைப்பகுதிகள் போன்றவற்றில் அடுக்குத்தொடரைப் பயன்படுத்தி எழுதுவர்.<br>• இரட்டைக் கிளவிகள் என்னென்ன குறிப்புகளில் வரும் என்பதை உணர்ந்து கொள்வர் அவற்றைத் தம் பேச்சிலும் எழுத்திலும் பொருத்தமாகப் பயன்படுத்த அறிவர். | • செய்தித்தாள்கள், கதைநூல்கள் படிப்பர்.<br>• கூடுதல் தகவல்களைப் பெறுவதற்காக நூலகத்தைப் பயன்படுத்துவர்.<br>• கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் போன்றவற்றை விளையாடி மகிழ்வர்.<br>• படக்கதை, அறிவியல் புனைகதைகள் ஆகியவற்றை நூலகத்தில் தேடிப் படிப்பர். | • பிற நாடுகள், உலகத்தலைவர்கள், அறிவியலறிஞர்கள் பெயர்களையும் சாதனைகளையும் அறிவர்.<br>• பலதுறை சார்ந்த கலைச்சொற்களை அறிவர்.<br>• அறிவியல் கலைச்சொற்களை அறிந்துகொள்வர்.<br>• சிறுவர்களுக்கான கதை, பாடல் முதலியவற்றைத் தேடிப் படிப்பர்.<br>• பழமொழிகள், மரபுத்தொடர்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தி எழுத அறிவர். |

| படைப்புத் திறன்கள் | விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல் | வாழ்வியல் தேர்ச்சிக்கான திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுத்துதல் |
|---|---|---|
| • ஒரே சொல்லில் தொடங்கும்/ முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்துகொள்வர்.<br>• நிகழ்ச்சியைச் செய்தியாக்குவர்.<br>• விளம்பரங்கள், அறிவிப்புகள், முழக்கத்தொடர்கள் உருவாக்குவர்.<br>• குறிப்பிட்ட தலைப்பில் கதை, கவிதை, உரை எழுதித் தயாரிப்பர்/ படித்துக்காட்டுவர்.<br>• சொல்லிலிருந்து சொல், சொல்லேணி, குறுக்கெழுத்துப் புதிர்கள், விடுகதைகள் உருவாக்க அறிவர். | • அறிவியல் மனப்பான்மை<br>• கூட்டுணர்வு<br>• சேமிப்பு உணர்வு<br>• நேர்மை<br>• உண்மை பேசுதல்<br>• விடாமுயற்சி<br>• தன்னம்பிக்கை<br>• விட்டுக்கொடுத்தல்<br>• ஒற்றுமையுணர்வு<br>• சிக்கனம் | • தன்னை அறியும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிக்கல் தீர்க்கும் திறன்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து பார்க்கும் திறன் |



Tamil 5th-std_Term 2.indd 67 8/1/2019 1:12:48 PM

## தமிழ் – ஐந்தாம் வகுப்பு
## தமிழ் ஆக்கம்

**கல்வி ஆலோசகர்**

**முனைவர். பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**மேலாய்வாளர்கள்**

**திருமதி ஆ.சே.பத்மாவதி**,எழுத்தாளர், சென்னை.

**திருமதி பா. மலர்விழி**, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர் மாவட்டம்.

**திரு சி. பன்னீர்செல்வம்**, கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை மாவட்டம்.

**திரு இல. சீனிவாசன்**, முதுகலை ஆசிரியர், மஜ்ஹருல் உலூம் மேனிலைப்பள்ளி, ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

**ஒருங்கிணைப்பாளர்கள்**

**முனைவர். கா.சா. மொழியரசி,** முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழப்பழுவூர், அரியலூர்.

**திரு ந. இராமலிங்கம்,** உதவிப் பேராசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**தே.விமலா தேவி,** விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**கலை மற்றும் வடிவமைப்புக்குழு**

**பக்க வடிவமைப்பு**

சந்தோஷ்குமார் சக்திவேல்

**வரைபடம்**

**கா. தனஸ் தீபக் ராஜன்**
**கா. நலன் நான்சி ராஜன்**
**வை.மை.பிராங்க் டஃப்**
**மதன் கங்காதரன்**
**ரா. ஷாலினி**

**தரக்கட்டுப்பாடு**

**ராஜேஷ் தங்கப்பன்**

**கி. ஜெரால்டு வில்சன், அருண் காமராஜ்**

**காமாட்சிபாலன் ஆறுமுகம்**

**வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்**
**ரமேஷ் முனிசாமி**

**பாடநூல் உருவாக்கக் குழு**

**திருமதி அர. அனுசுயா தேவி,** இடைநிலை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையாம்பாளையம், கோலியனூர் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

**திருமதி பெ. முருகராணி,** இடைநிலை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, மருவத்தூர், வேப்பூர் ஒன்றியம், பெரம்பலூர் மாவட்டம்.

**திருமதி க. மல்லிகா,** தலைமை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர், திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

**திரு. பா.ச. குப்பன்,** இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல், காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

**திரு. ஆ. மாணிக்கம்,** இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி, அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

**திருமதி. ந. பரிமளா,** தலைமைஆசிரியர், அம்பத்தூர் நகராட்சி தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம், வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

**திரு. வெ. ராஜா,** இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி, கொங்கணாபுரம், சேலம்.

**திரு. கு. மனத்துணைநாதன்,** இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர், நாகப்பட்டினம் மாவட்டம்.

**திரு. பெ. கார்த்திகேயன்,** இடைநிலை ஆசிரியர் ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை, நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

**திரு ப. சக்திவேல்,** இடைநிலை ஆசிரியர் ஊ. ஒ. தொ. பள்ளி, பூங்குளம்பட்டி, கொல்லிமலை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்.

**திரு. மு. ராஜா,** வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர் திருவாலங்காடு ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்.

**விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு**

**இரா. ஜெகநாதன்,** இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

**ஆ.தேவி ஜெஸிந்தா,** ப.ஆ, அ.உ.நி.பள்ளி, என்.எம்.கோவில், வேலூர்

**வ. பத்மாவதி,** ப.ஆ, அ.உ.நி. பள்ளி, வெற்றியூர், திருமானூர், அரியலூர்.

**அட்டை வடிவமைப்பு**
**கதிர் ஆறுமுகம்**



Tamil 5th-std_Term 2.indd 68 8/1/2019 1:12:48 PM